### விடாமுயற்சி, தன்னம்பிக்கையால்

# சிகரத்தை நோக்கி செல்லும் கிராமத்து வீராங்கனைகள்

## சாதனை படைக்க அரசு உதவுமா?

நெல்லை, மே 25: விடாமுயற்சி மற்றும் தன்னம்பிக்கையால் சிகரத்தை நோக்கி செல்லும் கிராமத்து வீராங்கனைகள், தங்களுக்கு அரசு உதவி செய்யுமா என்று எதிர்பார்ப்புடன் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

நெல்லை அருகே உள்ள தாழையூத்தை அடுத்த நாரணம்மாள்புரம் செயின்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளியை சேர்ந்த 6 மாணவிகள் கடந்த 2008–2009 கல்வியாண்டில் உலக திறனாய்வு திட்டத்தின் கீழ் தடகள போட்டிகளில் 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர் ஓட்டங்களில் சாதனை படைத்தனர். 2 மாணவிகள் அகடமி தேர்வில் தேர்வு செய்யப்பட்டு அரசு பயிற்சி முகாம்களுக்கு சென்னைக்கும், திருவண்ணாமலைக்கும் சிறப்பு பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். இவர்களது வெற்றிக்கு பின்னணியில் இருந்து செயல்பட்டு வருபவர் இப்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் சுந்தரமூர்த்தி. இவரது தொடர் முயற்சியால் இம்மாணவிகள் சிகரத்தை நோக்கி செல்கின்றனர். எவ்வித வசதியும் இன்றி சாதனை படைக்க துடிக்கும் இம்மாணவிகளை பார்த்த பாளை அண்ணா விளையாட்டரங்க தடகள பயிற்றுநர் பிராங் பால் ஜெயசீலன் நாரணம்மாள்புரத்திற்கு நேரில் சென்று மாணவிகளின் உடல்திறனை பரிசோதித்து அவர்கள் மாநில அளவில் சாதனை படைக்க தகுதியானவர்கள் என கண்டறிந்து அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகிறார்.



பாளை அண்ணா விளையாட்டரங்கில் தடகள பயிற்சி எடுத்துக்கொள்ளும் நாரணம்மாள்புரம் செயின்ட் ஜோசப் பள்ளி மாணவிகள்.



இது குறித்து உடற்கல்வி ஆசிரியர் சுந்தரமூர்த்தி கூறுகையில், இந்த சாதனைகளை படைப்பதற்கு மாணவிகளின் தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமே காரணம். பள்ளி தவிர விடுமுறை நாட்களில் வெறும் பழைய சாதத்தை உண்டு விட்டு காலை 5 மணிக்கு சைக்கிளில் 10 மைல் தொலைவு பாளை அண்ணா விளையாட்டரங்கிற்கு மாணவ, மாணவிகள் பயிற்சிக்கு வருகிறார்கள்.

இவர்களது பெற்றோர் பெரும்பாலானோர் விவசாய கூலி வேலை செய்பவர்கள். 9ம் வகுப்பு பயிலும் மீனா தந்தையின் பெட்டி கடையில் வியாபாரத்தை கவனித்துக் கொண்டு பள்ளிக்கு வந்து பயிற்சியும் எடுத்துக்கொள்கிறார். மாணவ, மாணவிகளின் வறுமையை அறிந்து விளையாட்டு ஆர்வலர்கள் பலர் உதவி வருகின்றனர். ஆனால் அரசு உதவி கிடைத்தால் மட்டுமே மாநில அளவில் மேலும் சாதனைகளை ஏற்படுத்த முடியும் என்றார்.